## 2.7 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் உள்ள கூடுதல் இயக்குநர்களை களப்பணிக்கு அனுப்புதல் – சில மாற்றங்கள்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (இ1) துறை

அரசாணை (நிலை) எண். 4 நாள் : 8.1.2008

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.17, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி துறை, நாள்.21.2.2007.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.77523/06/ஜிஇ.1 நாள்.14.12.07.

**ஆணை**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்ககத்தில் உள்ள 6 கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர் பணியிடங்களில் கூடுதல் இயக்குநர் (பணியமைப்பு) மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முடிவு செய்யும் ஒரு கூடுதல் இயக்குநர் பணியிடம் நீங்கலாக மற்ற 4 கூடுதல் இயக்குநர் பணியிடங்களையும், இணை இயக்குநர் பணியிடங்களையும் அதில் பணிபுரியும் அலுவலர்களை பணி மாற்றம் செய்யத் தக்க வகையில், அனுமதிக்கப்பட்ட மொத்த பணியிட எண்ணிக்கைக்கு மிகாமல் நிலை தாழ்த்தியும், உயர்த்தியும் பரிமாற்றம் செய்யத் தக்க வகையில் நெகிழ்வு மற்றும் பரிமாற்ற தன்மை கொண்ட பணியிடங்களாக (flexible and interchangeable posts) அறிவித்து அரசு ஆணையிட்டது. இந்த அரசாணையின்படி மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் பணியிடம் கூடுதல் இயக்குநர் நிலை பணியிடமாகவே இருக்கும்.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணைக்கு சில மாற்றங்கள் வெளியிடக் கேட்டு கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து அரசாணை (நிலை) எண்.17, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி துறை, நாள் 21.2.07க்கு கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்து ஆணையிடுகிறது:–

(i) திட்ட அலுவலர்கள் பணியை சரிவர கண்காணிப்பதில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு உதவி புரிய எந்தவொரு காலகட்டத்திலும் குறைந்தபட்சம் 4 கூடுதல் இயக்குநர்களாவது ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்ககத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம் எனக் கருதி, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்கத்தில் உள்ள கூடுதல் இயக்குநர் (பணியமைப்பு) மற்றும் இத்துறை முடிவு செய்யும் மூன்று கூடுதல் இயக்குநர் பணியிடங்கள் நீங்கலாக மற்ற கூடுதல் இயக்குநர் பணியிடங்கள் நெகிழ்வு மற்றும் பரிமாற்றத் தன்மை கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.

(ii) ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்ககத்தில் கூடுதல் இயக்குநர்களாக குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகள் பணிபுரிந்தவர்களை மட்டுமே களப்பணிக்கு அனுப்பலாம். இந்தப் பரிமாற்றக்கூறு (interchangeability clause), கூடுதல் இயக்குநர்களாக பதவி உயர்வு பெறும் இணை இயக்குநர்களுக்கு இடமளிப்பதற்காக, இணை இயக்குநர் நிலையிலுள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்கள், மகளிர் திட்ட, திட்ட அலுவலர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி பயிற்சி நிலைய முதல்வர்கள் ஆகியோர் பதவிகளை நிலை உயர்த்தப் பயன்படுத்தக்கூடாது.

(iii) ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்ககத்தில் அல்லது அதற்கு சமமான நிலையிலுள்ள அலுவலகங்களில் ஐந்து வருடம் அனுபவம் பெற்ற கூடுதல் இயக்குநர்களை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்களாகவோ, மகளிர் திட்ட, திட்ட அலுவலர்களாகவோ, மண்டல ஊரக வளர்ச்சி நிலைய முதல்வர்களாகவோ அரசு முடிவு செய்யும் வகையில் நியமிக்கலாம்.

(iv) களப்பணிக்கு அனுப்பப்படும் கூடுதல் இயக்குநர்களை மூன்றாண்டுகளுக்கு மிகாமல் களப்பணி புரிய அனுமதித்து பின்னர் தலைமையிடத்தில் மீண்டும் நியமிக்கலாம்.

(v) சுனாமி செயலாக்கப் பிரிவு மற்றும் மகளிர் மேம்பாட்டுத் திட்ட அலுவலகங்களுக்கு முறையே மூன்று கூடுதல் இயக்குநர் பணியிடங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளதாலும் அனைத்து கூடுதல் இயக்குநர்களும் மாவட்ட அலுவலகப் பணிகளை கண்காணிக்க தேவையாக உள்ளதாலும் இந்த பரிமாற்றம் இந்த கூடுதல் இயக்குநர் பணியிடங்களுக்கு பொருந்தாது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்